ஆண்டு பட்டிகை வழக்கு எண்.213/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 213/2025 LW– 10 PW– 9

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : | முருகேசன் |
| Village | : | திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| Taluk | : | திண்டுக்கல் |
| District | : | திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : | 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் மதியம் 3:55 P.M. – 4:40 P.M.

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.09.2024ம் தேதி 18.10 மணிக்கு நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஆறுமுகம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட 900/2024 என்ற மனு ரசீதுடன் கூடிய புகார் மனுவைப் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.524/2024 சட்டப் பிரிவுகள் 296(b), 115(2), 118(1) மற்றும் 351(2) BNS பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை நான் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 19.00 மணிக்கு சம்பவ இடமான நத்தம், ராக்காச்சிபுரத்தில் உள்ள வாதியின் வீட்டின் முன்பு வைத்து சாட்சிகள் ஜெயராமன் மற்றும் பாண்டித்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சம்பவ சாட்சிகள் அன்புக்கரசி, சண்முகவள்ளி, முஸ்தாக்அலி, ரிஷ்வானாபர்வீன், துளசிமணி, ஜெயராமன் மற்றும் பாண்டித்துரை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 21.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான முருகேசன் என்பவரை காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் சாட்சிகள் விசாரணையின் அடிப்படையிலும், எனது தனிப்பட்ட விசாரணயின் அடிப்படையிலும் 2 முதல் 4 வரையிலான எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரிய வந்ததால் அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். **(எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அன்புக்கரசி என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பிரவீன்குமார் என்பவரை 24.09.2024ம் தேதி விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.பின்னர் மனு ரசீது கொடுத்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஆறுமுகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி முருகேசன்

என்பவர் மீது 25.09.2024ம் தேதி 296(b), 115(2), 118(1) மற்றும் 351(2) BNS பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

5) 7.9.2024 ஆம் தேதி மதியம் சுமார் இரண்டு 20 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு 10.9.2024 ஆம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்கு நாட்கள் காலதாமதமாக புகார் மனு கொடுக்கப்பட்டதற்கான காரணம் புகார்தாரரால் புகார் மனுவில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். 10.9.2024 ஆம் தேதி கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு 19/9/2024 ஆம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07.09.2024 முதல் 10.09.2024 வரையிலான காலகட்டத்தில் மருத்துவமனையிலிருந்து சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. மனு ரசீதானது வழக்கு கோப்புடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை ஆனது நீதிமன்றத்திற்கு 20 நாட்கள் கால தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. புகார்தாரர் புகார் மனுவில் சம்பவமானது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து நடந்ததாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 புகார் மனு மற்றும் எனது விசாரணையில் அவரது அண்ணி பிரபாவதி என்பவர் சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, அவர் சண்டையை விலக்கி விட்டதாகவோ குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரை அ.சா.1க்கு படித்து காண்பித்ததாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தால் அ.சா.1க்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார், ஆனால் நெற்றியில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7.) அ.சா.1 எனது விசாரணையில் தான் பியூட்டிசியனாக வேலை பார்ப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் எதிரி குழந்தைகளை பார்க்க வந்ததில் குழந்தைகள் எதிரியை பார்த்து, இவ்வளவு நாள் பார்க்க வரவில்லை இப்ப ஏன் வந்தீங்க என்று கேட்டதாக சொன்னார்களா என்றால் இல்லை. அ.சா.1 புகார் மனு மற்றும் எனது விசாரணையில் சம்பவம் ஆனது வீட்டு தெருவில் நடந்ததாகவோ, சத்தம் வெளியே கேட்கும் அளவிற்கு பிரச்சனை நடந்ததாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசியதால் தனக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ மதிப்பிழப்பு ஏற்பட்டதாகவோ மற்றவர்கள் கேட்கும் வகையில் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அசிங்கமாக பேசிய விபரத்தை தெரிவித்துள்ளார், மற்ற விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் மகன் நீங்கள் குடித்து விட்டு வந்திருக்கிறீர்கள், வீட்டுக்கு போங்க என்று சொன்னதாக எனது விசாரணையில் அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) அ.சா.1 எனது விசாரணையில் எதிரி அ.சா.1ன் கைகளிலும், கால்களிலும் மாறி மாறி அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் உனது அம்மா என்ன வேலை பார்த்து உங்களை படிக்க வைக்கிறார் என்று தெரியுமா என்று கீழ்த்தரமாக பேசி இவருடன் வாழ வேண்டாம் என்று குழந்தைகளிடம் சொன்னதாக சொன்னாரா என்றால் இல்லை. எதிரி தேவிடியா, நாரக்கூதிமக, தேவிடியா புண்டை என்று அசிங்கமாக பேசியதாக புகார் மனு மற்றும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், தேவிடியா முண்டைகளா என்று திட்டியதாக சொல்லியுள்ளார்.

9) அ.சா.2 எனது விசாரணையில் எதிரி குழந்தைகளை பார்த்து உங்கள் அம்மா என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்று கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எதிரி குடிபோதையில் இருந்ததாகவோ சத்தமாக பேசியதால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் பார்த்தது

எங்களுக்கு அவமானமாக இருந்ததாகவும், எதிரி தேவிடியா வேலை பார்த்து தான் குழந்தைகளை பராமரிக்கிறீங்க என்றும், போங்கடி நாரக்கூதிங்களா என்றும், தேவிடியா முண்டைகளா என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் அவர் எனது விசாரணையில் மூத்த பேரனை பாத்துட்டீங்கள நீங்க வீட்டுக்கு போங்க என்று சொன்னதாக சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.2 எனது விசாரணையில் அவரது மகளின் உடம்பில் எதிரி மாறி மாறி அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

10) அ.சா.4 எனது விசாரணையில் அவரது கணவர் பெயர் தேவேந்திர வேல் பாண்டியன் என்றோ அவர் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் துளசி மணி என்பவரது வீடு சம்பவ இடத்திற்கு அருகில் இருப்பதாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சாட்சி மோர் வாங்குவதற்காக மதியம் 1:30 முதல் 2.30க்கு வெளியே வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் மேற்படி சாட்சி அவரும் அ.சா.1ன் அண்ணி பிரபாவதியும் சேர்ந்து சண்டையை விலக்கி விட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

11) வழக்கு சொத்து எதுவும் இந்த வழக்கு கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.4 ஆகியோர் எனது விசாரணையில் அ.சா.1க்கு நெற்றியில் எந்த பக்கத்தில் காயம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் காயப்பட்டதாக சொல்லப்படும் நபர் சம்பவம் 2.30 மணிக்கு நடந்து மாலை 5.00 மணிக்குதான் மருத்துவமனை சென்றார் என்றால் சரிதான். இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் எங்கு சென்றார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகள் 15 நிமிடம் அல்லது 30 நிமிட நேர இடைவெளியில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

12) இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி திரு.கார்த்திகேயன் என்பவர் கிடையாது என்றால் சரிதான். கார்த்திகேயன் என்பவர் இவ்வழக்கில் சம்பவ இட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சியான பாண்டிதுரை என்பவர் மகசரில் செய்துள்ள கையொப்பமும், நீதிமன்ற சம்மன் மற்றும் சாட்சியத்தில் செய்துள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகார் மனு சொன்ன தேதியில் ஆறுமுகம் என்பவரால் பெறப்படவில்லை என்றாலும், பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் முதல் தகவல் அறிக்கையானது காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து சொன்ன தேதியில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. குடும்ப பிரச்சனையை மனதில் வைத்து மிகைப்படுத்தி புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர சாட்சிகளை விசாரிக்காமல் எதிரி மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Co-Ordinater @ Court Point
(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J Aafreen Begum M.com., L.LM., Digitally signed by J Aafreen Begum M.com., L.LM., Date: 2026.06.02 17:56:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்